**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 85** **நாள் : 24.05.2024**

**பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ஐக்கிய நாடுகள் கருவூலத் துறையின் சார்பில் அலுவலர்களுக்கு நடத்தப்பட்ட பணிப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டவர்களுக்கு கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் சான்றிதழ்களை இன்று வழங்கினார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ஐக்கிய நாடுகள் கருவூலத் துறையின் (US Treasury Department – OTA, Government Debt and Infrastructure Program) சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு துறைகள் மற்றும் மண்டலங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு நடத்தப்பட்ட பணிப் பயிற்சி வகுப்புகளில் (Business Case Training Workshop) கலந்து கொண்டவர்களுக்கு கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் சான்றிதழ்களை இன்று (24.05.2024) சென்னை, எழும்பூர் தனியார் நட்சத்திர விடுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ஐக்கிய நாடுகள் கருவூலத் துறை (US Treasury Department – OTA, Government Debt and Infrastructure Program) அமைப்புகளுக்கிடையே 2024-25 பணி திட்டமில் (Work Plan 2024-25) ஒப்பந்தம் பிப்ரவரி மாதம் 2024இல் கையெழுத்தானதைத் தொடர்ந்து, நகராட்சி பத்திரங்கள் நிதி வாய்ப்புகள், கடன் திறன் பகுப்பாய்வு, வரவு-செலவு மூலதனம், பணித்திறன் பயிற்சி வகுப்புகள் நடத்துதல் போன்ற அம்சங்களில் ஒருங்கிணைந்து செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் கருவூலத் துறை குழுவின் (US Treasury Team) சார்பில் 22.05.2024, 23.05.2024 மற்றும் 24.05.2024 ஆகிய 3 நாட்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு துறைகள் மற்றும் மண்டலங்களில் பணிபுரியும் 30 அலுவலர்களுக்கு சென்னை, எழும்பூர் நட்சத்திர விடுதியில் பணிப் பயிற்சி வகுப்புகள் (Business Case Training Workshop) நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்ட அனைத்து அலுவலர்களுக்கும் கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் இன்று சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., மாநகர வருவாய் அலுவலர் திரு.சுகுமார் சிட்டிபாபு, ஐக்கிய நாடுகள் கருவூலத் துறையின் உட்கட்டமைப்பு ஆலோசகர் திரு. ஆடம் ஜெ. ஒயிட்மேன் (Mr. Adam J. Whiteman), உட்கட்டமைப்பு நிதி ஆலோசகர் திரு.வில்லியம் ஸ்ட்ரீட்டர் (Mr. William Streeter) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/ மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி**